ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலிஷ்மீ கய. உ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்

புத்தகம்-க.] ௧௮௮௯ ௵ டிசம்பர்மீ கயஉ [இலக்கம்-எ.

ப்ரஹ்மவித்யா

ஶிவபுராணஸாரः

(புராணாநுபந்த:)

[illegible]

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருத பாஷை.

புராணம் [தொடர்ச்சி]

அங்ஙனமே சிவபுராணம் "வாயுசங்கிதையில் "தவத்தால் தகப்பனுய பரமேசுரனைச் சந்தோஷிக்கச்செய்து,, என்றும் "பிரமதேவனையும், நாரணனையும் ஒரு கற்பத்தில் உருத்திரன் பிறப்பித்தான்,, என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், உலகத்திற்குக் காரணமான மும்மூர்த்திகளுக்கும் உயர்வு ஒவ்வொருகாலத் துளதெனக் கூறியதுபற்றி அம்மூர்த்திகளின் பெருமையை விளக்கும் புராணங்கள் எவ்வாற்ருனும் குற்றமுள்ளனவாகாதென்க. ஆகையினுலே காளிதாசகவிமணியும் தான் செய்த குமாரசம்பவம் என்னுங் காவியத்தில் "ஒரே வஸ்து மும்மூர்த்திகளாயிற்று, ஆதலால் அம்மூர்த்திகளின் பெருமை சிறுமை இவை இயல்பே,, என்று நன்ருய் நாம் முற்கூறியபடி வெளியிட்டார். மற்றும், மேற்கண்ட வாதிகள் எடுத்துச் சொன்னபடி ஒவ்வொரு கற்பங்களில் பிரமதேவன் ஒவ்வொரு புராணங்களைச்செய்ததாகவல்லவோ பொருள் புலப்படுகின்றது? அதுவும் முற்றிலும் பிரமாணங்களுடன் ஒத்ததல்ல. ஏனெனில், உலகசிருஷ்டி தொடங்கியகாலத்திற்ருனே வேத தர்மசாஸ்திரங்களுடன் கூட ஒரேதடவையாய்ப் பிரமதேவன் முகமலரின்கண்ணே புராணங்கள் தோன்றியதாக ஸ்ரீமான் வேதவியாசமுனிவர் மச்சபுராணத்திற் சொல்லுதலால் என்று அறிவோம். எங்ஙனமெனில், அவ்விடம் வசனமிது "புராணங்களும் தருமநூல்களும் முதலிற் பிரமதேவன்முகத்தில்வெளியாயின. பிறகு வேதங்கள்தோன்றின,, என்றும் "ஓ அரசனே! முற்கற்பங்களில் புராணம் ஒன்ருகவேயிருந்தது,, என்றும் கூறப்பட்டுள்ளது. அதுகொண்டு நாம் சற்றுக் க[illegible]த்துப் பார்ப்போமாகில் புராணங்கள்சிறிதேனும் அப்பிரமாணமெனச் சொல்லத்துணியேம். யாமோ ஓர் மதத்தில் பக்ஷபாதத்தால் சில புராணங்கள் தப்பென்றும், சில புராணங்கள் சரியென்றும் இங்கு ஏதேனும் வரைந்திட எழுந்தனமன்று. இக்காலத்தோ ஆங்காங்கு மத துரபிமானங்கொண்டு ஏதோ ஒரு மதத்தில் பக்ஷபாதத்தால் அதற்கு வேண்டியபிரமாணங்க

[illegible]

ளைத் தேடிவரும் நம்மவருட் சிலர் சிற்சில வாக்கியங்களுக்குத் தம் புத்திபிற்றேன்றியபடி அர்த்தங்கள் செய்வதும், சில வாக்கியங்களைக் கற்பித்தெழுதுவதுமே வேலையாகக்கொண்டு, மற்றவரும் தமது கொள்கையைப் பற்றும்படி விடாமுயற்சி செய்து வருகிறார்கள். அவர்களுக்குக் கோபமுண்டாயினும் நம்முடைய வாராய்ச்சிக்குக் கிடைத்த சங்கதிகளை நாம் உள்வைத்து மூடவேண்டியது அனுவசியகமாதலால் இப்பெரும் புராணநூற்களின் பெருமையை விளக்கும் பிரமாணங்களை வெளியிட்டோம். உள்மதங்களைக் கொண்டு சண்டை செய்வதற்குச் சமயம் இதுவல்லவென்பது யாவரும் நன்றாக அறிந்திருந்தும் தம் மதத்திலுண்டான அவரது பெரும்பற்று அவர்களை ஆட்டிவருவதால் அவர்கள் அவ்விதம் செய்துவருகிறார்கள் இப்பொழுதோ நமது பெரியோர்களின் புகழ்வடிவமெனக் கூறத்தக்க பெருமைபொருந்திய நூல்கள் எல்லாவற்றிலும் ஜனங்களுக்கு நம்பிக்கை குன்றிவருவதை நாம் கண்டிருக்கிறோம். இக்காலத்திலும் நம்மவரே ஒற்றுமையடையாது ஒருவர்க்கொருவர் திருக்கித்து ஒருவர் குற்றத்தை மற்றொருவர் எடுத்துரைப்பது தமக்குப் பெருமையாய்க்கொள்ளின், எல்லாக் குற்றங்களையும் மற்றவர் அறிந்து நம்மவரெல்லோரையும் தூஷிக்கப் பெருங்கணம் பூணுவதற்கு வேறு காரணமும் வேண்டியதுண்டோ? நாத்திகருக்கோ நம்மவர் ஒருவர் குற்றத்தை மற்றொருவர் கூறப்புகுவது பெரும் மகோற்சவமாக முடியும். ஆகையால், வித்துவான்களே! வீண் துர்வாதத்தைவிடுங்கள்! இது சமயமல்ல. நமதுள்மதச் சண்டைகளுக்கு எவ்விதமும் சேட்பது பிரார்த்தனையல்ல. விவாதம் செய்பவரிடம் உத்திரமளிப்பதே யுக்தமாகும். விவாதத்திலாவது வீரர்களுடன் எதிர்த்துப் போர்புரியுங்காலாவது, வித்துவான்களேனும் வீரர்களேனும், வாக்கினாலாயினும் ஆயுதங்களினாலாயினும் நேரிடும் சண்டையை விலக்கக் கேட்கப் புகுதல் முற்றிலும் பரிகசிக்க இடமாகுமல்லவா? ஆதலால், நாம் இவ்விடம் சொல்லும் வார்த்தைகள் இம்மையிலும் மறுமையிலும் ஹிதத்தைக் கொடுக்கும் வழியென்றறியக் கடவீர். எங்ஙனமெனில், இக்காலத்துதித்த நமது வித்துவசிகாமணிகள் ஆத்திகர்களும் வைதிகர்களும் ஆரியகுலத்திற் பிறந்தவர்களுமான நம்மவர்களிற்றானே நமது பராக்கிரமத்தைக் காட்டக்கருதி ஒருவரையொருவர் ஜெயிக்க வல்லவரேயன்றி நாத்திகரைக் கண்டால் நாலுகாதத்திற்கப்புறம் ஓடிவிடுவார்கள். நாம் அனைவரும் சேர்ந்து ஒரு சமயம் தூக்கத்தைவிட்டுக் கண்ணை விழித்துப்பார்ப்போமானால் நம்மவரே நமது குலதனமான ஆரியபாஷைப் பயிர்ச்சியை விட்டு பெரியோர்கள் சகவாசம் துறந்து பின்னும் வெவ்வேறு பாஷை கற்றுத்திரிய நாத்திகம் அவரிடம் வேர்பற்றியிருப்பதை நன்கு காணலாம் இதே நாத்திகத்தை நமது பெரியோர்கள் தலையெடுக்கவொட்டாமற் கண்டிக்கப்புகுந்து புராணங்களையல்லவா அக்காரியம் நிறைவேற்றக் கருவியாக்கினார்கள்? இது விஷயம் சிவபுராணம் அக்கினிபுராணம் முதலியவைகளைப்படித்தால் நன்றாக விளங்கும். சிவபுராணத் தொடக்கத்திலே நாத்திகமறுப்பு ஒருவாறாய்க் கூறப்பட்டுள்ளது வருமாறு காண்க.—"இச்சகம் முதற்காரணமான ஓர் கருத்தாவை அவாவுகின்றது காரியமாதலால் இச்சகம் காரியமே அவயவங்களுடன் கூடியதாதலால்,, என்றும், "மாயை பரமாணுமுதலிய அறிவற்ற ஜடங்கள் அறிவுள்ள ஒரு கர்த்தனின்றி அசையாது,, என்றும் பல வசனங்களுண்டு. இ

[illegible]

ங்காத்நிகத்தை பொழிக்கவேண்டி ஒருவன் தான் தெரிந்துகொள்ளவேண்டிய அநேகவித்தைகளின் சாரங்கள் ஸ்ரீமத் அக்கினிபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது பார்த்தால் தெரியவருமே. ஆதல்கொண்டே "அக்கினியின் மான்மியமும், சிவமான்மியமும் தாமதகற்பத்திற் சொல்லப்பட்டது,, என்று மச்சபுராணத்திலுள்ளது. அதின் பொருள் யாதெனில், அக்கினியின் மான்மியமும் [அதாவது அக்கினிபுராணம்] சிவமான்மியமும் [அதாவது சிவபுராணம்] இவைகள் தாமதகற்பத்தில் ஜனங்கள் அஞ்ஞானக்கடலில் மூழ்குவதைக்கண்டு அவர்களுக்கு நல்வழி காட்டக்கருதி அவர்களையே நோக்கி ஆத்திகமூலகாரணமாயும் அநேக வித்தைகளின் சங்கிரகமாயும் அவசியமாயும் உள்ளதாயும் புகழ்பெற்றனவாதலால், கருணைக்கடலாய பிரமதேவன் இவைகளை அருளிச்செய்தார். அது ஒவ்வொரு கற்பத்திலும் அவசியமெனக்கருதிய அப்பிரமதேவன் பிறகு ஒவ்வொரு கற்பத்தில் அதிகமாய் அவ்வக்கற்பங்களுக்குரிய அதிகாரிகளான பிரமதேவன், ஸ்ரீநாராயணன் இவர்கள் கதைகளுடன்கூடிய மற்றப் புராணங்களையும் எடுத்துரைத்தாரென்று ஒப்புக்கொள்ளவேண்டியது. ஆதல்கொண்டே முதலில் "சங்கீர்ணம், சாத்துவிகம், இராசதம், தாமதம் எனப் பெயர்பெற்றும், பிரமதேவனுக்கு ஒவ்வொரு நாட்களாயும் உள்ள கற்பங்கள் நான்குவகை பெற்றன,, எனத் தொடங்கிய கிரமத்தை விட்டு முதலில் தாமதகற்பத்தில் வெளியான புராணத்தைச் சொல்லத்தொடங்கியது எல்லாக் கற்பங்களுக்கும் இது பொதுவாதலால் இதை முன் சொல்லிப் பிறகு அவ்வக்கற்பங்களுக்கு மாத்திரம் உபயோகமான சில சங்கதிகளுள்ள புராணங்களைச் சொன்னால் பதச்சுருக்கஞ்செய்யலாமென்பது கருத்தென விளங்கியது. இல்லாவிடில் ஒவ்வொரு கற்பத்திலும் பொதுவான இப்புராணங்களையும் சொன்னதாயல்லவா சேர்க்கவேண்டிவரும்? ஆதல்கொண்டே நாம் முன் எடுத்துக்காட்டிய மச்சபுராணவசனத்தொடரில் "அக்கினியின்மான்மியமும், சிவமான்மியமும் தாமதகற்பத்திலுள்ளது,, எனக்கூறிப் பின்பு "இராசதகற்பங்களிற் பிரமன்மான்மியம் அதிகம். சாத்துவிக கற்பங்களில் விஷ்ணுமான்மியம் அதிகம்,, என்றுள்ளது காண்கிறோம். ஆராயுங்கால் புராணங்களில் தோற்றும் கதைகளின் வேறுபாட்டால் தோன்றிவரும் அப்பிரமாண சங்கை நிகழாதவழி அப்புராணங்களைச் சமாசப்படுத்தவே இந்த வசனங்கள் எழுந்தனவென்பது திண்ணம். இந்த விஷயங்களைப்பற்றித் தென்னாட்டில் அவதரித்த ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதசுவாமிகள், தற்காலத்திலிருந்த வித்துவான்களிலொருவரான இடையாத்துமங்கலம் அப்புசாஸ்திரிகள், ஸ்ரீநீலகண்டதீக்ஷிதரவர்கள் முதலிய பெரியோர்கள் தாம் எழுதிய கிரந்தங்களில் எழுதியது அவ்விடமே காண்க. இவ்வகை ஏதுக்களால் புராணங்களிலுள்ள கதைகளின் பேதமும், தேவதைகளின் சரித்திர பேதமும் இவ்விதம் பரிகரிக்கத்தக்கது. ஒவ்வொரு கற்பங்களில் ஒவ்வொரு மூர்த்திகளுக்குப் பெருமையுண்டாவது அம்மூர்த்திகளுக்கியல்பாதலால் அப்பெருமைகளைவிளக்கிய புராணங்கள் எவ்விதமும் விரோதிக்காது. ஒவ்வொரு புராணங்களிலும் அநேக தேவர் ரிஷிகள் சரித்திரங்களைக் கேட்குங்கால் அவர்கள் பெருமையும், அவர்களுக்கு உபாசனமூர்த்திகளான மும்மூர்த்திகளின் பெருமையும், அவ்விதம் பெருமைபெற்ற அம்மூர்த்திகளுக்கும் மூலகாரணமான பரமாத்மாவின் மகிமையும் நன்றாக விளங்கும். மற்றைக் கதைகளோ

[illegible — Sanskrit passage in Grantha script]

[illegible — heading in Grantha script]

[illegible — Sanskrit passage in Grantha script]

நாம் முன் உரைத்தபடி புராணங்கள் ஒரு நல்ல சிநேகிதன் போன்றனவாதலால் சில கற்பனங்களும் இருக்குமென்று அவ்வக்கதைகளின் உண்மையான சங்கதிமாத்திரம் அவ்விடம் எடுத்துக்கொள்ளப்படுமென்பது உட்கருத்து. பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்கள் பரப்பிரமத்தின் சக்திகள் என்பது விஷ்ணுபுராணத்தில் "பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்கள் முக்கியமான பரப்பிரமத்தின் சக்திகள்,, என்றும், சிவபுராணத்தில் "எப்பொருளினின்று பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் இவர்கள் பூதங்கள், இந்திரியங்களுடன்கூடி முதலிற் பிறக்கின்றனரோ,, என்றும் பெறப்பட்ட வசனங்களால் வெளியாக்கப்படுகின்றது. ஆயின், இவ்விடம் மூலமாய்ச் சொல்லப்படும் பரமான்மா அரூபனா? அல்லது ரூபமுள்ளவனா? ரூபமுள்ளவனாயிற் சிவரூபனா? அலலது விஷ்ணுரூபனா? என்பனபல சங்கைகள் உண்டாயின் அவைகளைக்குறித்து எழுதுவது புராணங்களின்பிரமாணத்தன்மையும், அப்பிரமாணத்தன்மையும், விஷயங்களும், வகுப்புகளும் எழுதும் பிரமாணத்திற்கேற்றவையெனவும், அந்தந்த மதங்களின் சுவரூபங்கள் கூறுமிடங்களிலும் விரித்துக்காட்டவேண்டியவையெனவும் எண்ணி இவ்விடத்தில் அவற்றையெடுதது உபந்யசித்தாமில்லை. அதுகொண்டே பதினெண்வித்தியாஸ்தானங்களைக் கணக்கிடும் பிரகாணத்தில் வியாசபகவானும் "புராணமும் தர்மசாஸ்திரமும்,, என்று புராணங்களனைவற்றிற்கும் பிரமாண்ணியமுண்டென்று மாபாரதத்தில் நன்கு கூறியிருக்கின்றனர். புராணங்களிற் சர்வவித்தைகளும் நிறைந்திருப்பதே.

இன்னும் வரும்.

ஆன்மாவும், சரீரமும்.

[தொடர்ச்சி]

நாம் இ.து விஷயத்தைப்பற்றி முன் எழுதியதை சில பாகம் தத்துவவிவேசினிப் பத்திரிகை மறுத்துக் கூறி, தை முன் பத்திரிகையில் ஒருவாறு விரிவாய் எழுதினோம். ஆயினும், மறுபடி அடுத்தவாரப் பத்திரிகைகளில் வந்த விஷயம் கொஞ்சம் மிச்சப்பட்டபடியால் அது விஷயத்தைப்பற்றி இங்கு சிறிது எழுதத் துணிந்தோம்.

நாம் எழுதும் விஷயமெல்லாம் நமது தத்துவவிவேசினிப் பத்திராதிபரவர்களுக்கு அடிக்கடி நகைப்பை விளைப்பதாய் அவர் எழுதியதுகொண்டே நாம் அறிந்து அவ்விதம் அவர் நகைப்பது நமக்கு வெகு சந்தோஷத்தையுண்டுபண்ணுமெனக்கருதி, எவ்விதத்திலும் அவருக்கு நகைப்பும் மற்ற ஆத்திகர்களுக்குக் களிப்பும் உண்டாக்கக் கருதி மறுபடி எழுதத்தொடங்கினோம். ஆயினும், நம்மை அவர் அடிக்கடி படிப்பில்லாதவரென்றும், பலவிடம் சென்று உண்மையான சங்கதிகளை உத்தமரிடங் கற்காதவரென்றும், வாதத்தில் வல்லமையற்றவரென்றும், முன்பின் விரோதமாய்க் குழறுபடையாய்ப் பேசுவாரென்றும் எழுதியதால், அதற்கு நாம் பதில் எழுதப்புகுந்து அவற்றை மறுக்க நமது அருமையான பத்திரிகையைக் கெடுக்க இஷ்டங்கொள்ளாமல் விஷயத்தைமாத்திரம் எடுத்து அவர் காட்டிய குற்றத்திற்குப் பரிகாரம் செய்யவேண்டியதே நமது கடமையென்று எண்ணி அவ்விஷயத்தையே எழுதுவோம். அவரது பத்திரிகையில் அவருக்குள்ள சுதந்தரத்தைக்காட்ட எவ்விதமும் எ

[illegible]

முதிரப்பக்கூடும்- நமது நண்பர் நாம் எழுதிய ஆன்மவிலக்கணத்தில் முன்பின் விரோதமுள்ள சங்கதியை வெளியிடக்கருதி, இரண்டு வாக்கியங்களை எடுத்து அவைகளைத் தமக்குத் தோன்றியபடி பலவிதம் பொருட்படுத்தி விரோதத்தையும் ஒருவிதம்காட்டி உடனே தமது சம்பிரதாயசித்தமான பரிகாசாஸ்திரத்தைப் பிரயோகித்து இதுவும் பிரமவித்தையோவெனப் பத்திரிகையின் குற்றத்தையும் எடுத்துரைத்தார். அவர் எடுத்த வாக்கியங்கள் "எங்கும் வியாபித்து உலகெலாம் நிறைந்த அறிவு மற்றொன்றைக்கவர ஏன் துணைக்கருவியை அவாவுமெனின் கூறுவாம். எங்கும் நிறைந்து அணுவணுவாயுள்ள அங்கியணுக்கள் தான் பிரகாசிக்கவேண்டி ஓர் சிறிய தரும்புமுதலியவற்றைத் துணையாகக்கொள்ளவேண்டியது அவசியமன்றோ?,, என்பதும், "முன்பு நாம் செய்த உபந்யாசத்தில் நன்கு மூளையென்கிற சரீரபாகத்திற்கு அறியுந்தன்மை ஒவ்வாதெனவும், அது மனத்திற்கு ஓர் ஸ்தானமெனவும் நன்கு விளக்கினதுமல்லாமல், அதைப்புத்தியுள்ளதெனவும் சொல்லும்வழி அநேகவித ஆக்ஷேபங்களையும் காட்டினோமாகையால் அது பொருந்தாதுபற்றி ஆத்மா என்பது அதிலும் அதாவது சரீரத்திலுள்ள எல்லா வுறுப்புக்களிலும் வேருயுள்ளதே. அதன் வடிவு யாதெனில், சரீரத்தில் காட்சிப்பிரமாணத்தால் அல்லது அனுமானத்தால், இச்சரீரத்திலுள்ள ஒரு உறுப்பின் குணமாய் அல்லது வேறு சரீரத்திலுள்ள உறுப்பாய்ப் பொருந்தாத அறிவே,, என்பதுமாம். இவ்வாக்கியங்களில் முதல்வாக்கியத்தில் மனம் என்பது அறியுந்தன்மையற்றதும், ஆன்மாவுக்கும் சில பொருட்களையறியத் துணைக்கருவியென வெளிப்படுவதாயும், இரண்டாவது வாக்கியத்தில் மனம் என்பது அறியுந்தன்மையுள்ளதெனப் புலப்படுவதாயும் முன் பின் விரோதக்காட்டிப் பிறகு ஆன்மாவின் இலக்கணத்தில் இலக்கணம்நன்குபுலப்படவில்லையெனவும் எழுதியிருக்கிறார். இவ்வாக்கியங்களில் முதல் வாக்கியத்தில் மனம் என்பதற்கு அறியுந்தன்மை யில்லையெனப் புலப்பட்ட தன்மையாயினும், இரண்டாவது வாக்கியத்தில் மனத்திற்கு அறியுந்தன்மையுள்ளதென விளங்கியது எவ்வாறோ? அறியேம்! அறிவினிடம் மூளையல்ல, அது மனத்தின் இடமே! என்று அதன் பொருள் புலப்படுவதாலும், மனம் அறியுந்தன்மை யுள்ளதென எவ்விதமும் பொருள்படாததலாலும் முன் பின் விரோதமயக்கம் விலகியது. ஆயினும், நமது நண்பர் சிலவேளை சொல்லைக் கவனியார், செய்கையைக் கவனிப்பார். சிலவேளை பொருளைக் கவனியார், சொல்லைக் கவனிப்பார்போலும்! இதுநிற்க. ஆன்மவிலக்கண வாக்கியத்தில் இவர் எழுதியபடி ஏன் இவருக்கு ஆன்மவிலக்கணம் விளங்கவில்லையோ? அறியேம்! பதங்களின் உண்மையான பொருளை யறியவேண்டித் தருக்கசாஸ்திரத்தைக் கற்றும், மேற்கெயுதித்த மகா வித்துவான்கள் எழுதிய சாஸ்திரங்களை நன்காராய்ந்தும் உண்மை வெளியிடக் கங்கணம்பூண்ட இந்நண்பருக்கு நாம் எழுதிய வாக்கியத்தில் அது ஆன்மாவன்று, இது அன்று என்று இல்லாமையின் எதிர்மறைகள் புலப்பட்டனவேயன்றி அறிவு என்பது ஏனோ மனதிற்படவில்லை? இதுவும் தத்துவவிவேசனம் போலும்!

மாதர் நீதி.

இப்பெயர்கொண்ட ஓர் புஸ்தகம் சேலப் ஜில்லா லோகல்பண்டு மாமத்து இலாகா சூபர்வைஸர் ஏ. ஜி. முருகேசமுதலி

[illegible]

யாரவர்கள எழுதியது. இது நமது இந்துப்பெண்களுக்கு அநேகமாய் உபயோகமுள்ளது. தற்காலம் நமது ஜாதியாசாரங்களெல்லாங் குறைந்துவருகிற் விஷயத்தைப்பார்த்து வருந்தும் ஜனங்கள் கடைத்தேற உள்ளபடி பெண்களே காரணமெனச் சொல்லத்துணிவோம். ஏனெனில், புருஷர்கள் பலவேறு பாஷைகளைக்கற்று பலவிதம் மேற்றிசையார் வேடம்பூண்டு தம் மதத்தையும், தமது நடையையும் முற்றிலும் மறந்து ஆசாரங்களைத் துறந்து எங்குந்திரிந்து வீட்டிற் புகுந்து சொக்காய்களையுங் கழட்டாது ஆகாரம் எங்கேயென வருங்கால், நமது பெண்கள் அவர்களுக்கு எதிரில் இந்துக்கள் உடைகளையே விடாது பூண்டு தமது மதாசாரத்துக்கேற்பத் திருநீறு, திருமண் முதலியவற்றைக் கொண்டுவந்து வைத்து அவர் நித்திய கடன்களைக் கழிக்கச் சுத்தஜலம் முதலியவற்றையும், கால்கை கழுவ நீரையும் கொண்டுவந்து வைக்கவே அவர்கள் உடையைக்கண்டு தாமும் இந்துக்களென எண்ணியும், அவர்கள் கொண்டுவந்து வைத்த வஸ்துக்களை அவர்களிடத்துள்ள நேசத்தினாலாவது, தாட்சணியத்தினாலாவது அத்திருநீற்றையோ திருமண்ணையோ மற்றெதையோ தரித்து வைத்திருக்கும் தண்ணீரைக் கவிழ்த்து உள்ளத்தில் இன்னும் இவர்களுக்கு வீண் நம்பிக்கை விடவில்லையேயென்று எண்ணியும் அதை வெளிக்காட்டாமல் ஹிந்து வேஷத்துடன் சாப்பிடச்செய்வதும், காலையில் வாசற்படி சுத்திசெய்யுங்கால் ஏதோ விசேஷம் என்று கேட்டு இன்று ஆத்தில் பெரியோர் திதியல்லவாவென்று அவர் எடுத்துரைக்க அறிந்து கொள்வதும், வீட்டில் சாப்பிடுங்கால் இலையில் அகத்திக்கீரை யிருப்பக்கண்டு இன்றுதானு துவாதசியென்பார்களென்பதும், எள்ளும் புல்லும் எடுத்துவைத்தால் இன்றுதான் அமாவாசை என்று அறிந்துகொள்வதும் நாம் அறிந்திருக்கிறோம். இக்காலத்திலும் நமது மதாசார ஜாதியாசாரம் முதலியவற்றிற்கு முற்றிலும் சத்துருக்களான பாதிரிமார் பள்ளிகளில் நமது பெண்பிள்ளைகள் படிக்க நாமே செய்து அவர்களிடம் உள்ள புஸ்தகங்களையே படிப்பிக்க நாம் இடங்கொடுத்தால், கூடிய சீக்கிரத்தில் நமது ஹிந்து மதாசாரம் ஒழிந்துபோமென்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. ஆதலால், நாம் ஒருவாறு பத்திரிகையில் எழுதியபடி படிப்பிக்க யத்தினஞ்செய்ய மேற்கண்ட புஸ்தகம் ஸ்திரீகளுக்கு மிக உபயோகமுள்ளதாய் நம்புகிறோம். இப்புத்தகத்தை நம்பால் அனுப்பியதற்கு மிக நன்றியுள்ளவராய் பரமேசுரன் இவருக்குப் பூர்ணாயுளளிப்பாரென அப்பரமனை வேண்டுகிறோம்.

பெண்களன்னியரினஞ் சேர்ந்து கல்விபயிலுவதனாலுண்டாகு மனர்த்தம்.

ஐயா,—சென்னைமாநகரிற் பெத்துநாய்க்கன் பேட்டையில் ஸ்தாபித்துள்ள பெண்பாடசாலையிற் கற்கும் நமது பெண்கள் மிஸ். ரெயினி யென்னுமோர் துரைமகளுக் களித்ததாகச் சொல்லப்பட்ட வந்தனப்பத்திரம்.— ௲கழும் நவம்பர்-மீ உஉ-ௗ மெட்ராஸ் மெயிலில் பிரசுரஞ்செய்திருந்ததையும், அதன்மேல் மெயில்பத்திராதிபரெழுப்பியசிலவிவேகமுள்ளவாக்ஷேபங்களையும் நம்மில்இங்கிலீஷ—வல்லஅநேகரும், தாங்களும்பார்வையிட்டிருப்பீர்கள். அந்த வந்தனப்பத்திரத்தில் நமது பெண்கள் தங்கள் தேச வழக்கங்களையும், தங்கள் தாய்தந்தையர் சகோதராதி குணங்களையும் நிந்தனையாகவெழுதிப் பகிரங்கமான சபையி

[illegible]

ல் படித்ததாகத் தெரியவருகின்றது. மறுதினம் மெயிலில் வெ
ளியான வோர் கடிதத்தால் அப்பத்திரத்திற் கூறியுள்ள நிந்த
னைகள் பெண்கள் சொன்ன பாவனைபாய் ஸ்கூலதிகாரிகளாற்
கற்பித்துரைக்கப்பட்டன வல்லவென்றும், அவை நமது பெண்
கள் சுயமாக வெழுதிக்கொடுத்தனவென்றும் நாட்டப்பட்டது.
அந்தோ! அரிய தவங்கிடந்து வருந்தியீன்ற மாதா பிதாக்களை
ச் சற்றேனும் அச்சமின்றி அவ்வாறு அன்னிய ஜாதியர்முன்
இகழ்ந்து அவமதிக்கத்தானோ நாம் பெண்களைப் பெறுவதும்?
சீராட்டி வளர்த்துப் பள்ளியில் வைப்பதும்? இப்படிக்கெல்லா
ஞ் சொல்லுந்துணிவை யுண்டுபண்ணும் போதனையில் பெண்க
ள் நீடித்துப் பயின்றுவரில், செல்லச் செல்ல இன்னும் என்
னென்ன விபரீதங்கட்கும், குடும்பங்களில் துக்கசம்பவங்கட்கு
மிடஞ்செய்ய மாட்டாதென்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்
டியது. மாதா பிதாக்களுக்கு மக்கள் செலுத்தவேண்டிய மரி
யாதைகளினருமைப்பாடு தோன்ற, அநந்த தருமங்களையு முள்
ளடக்கிச் சுருக்கமாய் "அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்,,
என நமது மூதறிஞர் போதித்திருக்கும் வாய்மை வியர்த்தமா
குங்கால் நேர்ந்ததுபோலிருக்கின்றது. இனி "மகன்றந்தைக்
காற்று முதவி யிவன்றந்தை-யென்னோற்றான் கொல்லென்னுஞ்
சொல்,, எனத் தெய்வ நாவலன் கட்டளையிட்டதும் மாறித் தந்
தையின் பேருதவிகளை மறந்து அவரது குணங்களையும், அவர
து மதாசார குலாசார வழக்கங்களையும் பகிரங்கமான சபைக
ளில் அன்னியர் மனங்களிக்கத் தூஷித்தலே "மகன்றந்தைக்
காற்றுமுதவி,, என்றுயினுமாகத் தடையுளதோ? பத்திராதிப
ரவர்களே! இன்னும் பால் மணமாறாத மலர்வாயினையுடைய
அப்பெண்க ளவ்வாறு உரைக்க நேர்ந்தது அவர்கண்மேற் குற்ற
மல்ல. அவர்களது இளமறிவு களிமண்ணனிற்கொக்கும். அதனை
எவ்விதந் திரட்டுவோமோ அவ்விதந் திரண்டுருவ மெய்தும்.
நந்தேசாசார தருமங்களில் வல்லவர் திரட்டில் அவ்வழி தி
ரண்டு நமக்குபயோகப்படும். நமதாசாரங்கட்கு வைரிகள் திரட்
டில் அவ்வழி திரண்டு நமக்குபயோகப்படாமல் வைரியாயுமே
ற்படும். இது சத்தியம். இதனை மறுக்க ஒருவராலு முடியாது.
ஆனால் பாதிரிகளைத் தான் குற்றஞ் சொல்லலாமோவெனில்,
அவர்களையுங் குற்றஞ்சொல்லப்படாது. ஏனெனில், அவர்கள்
தங்கள் கருத்தை யொளிக்காது, ஆசுகிலேயநாட்டிலும் இந்நா
ட்டிலும் மஹாசபைகள் கூடி அவற்றில் நமது தேயத்துப் பெ
ண்களைப் படிப்பிக்கவேண்டிய காரணத்தை வெளியரங்கமாயுல
கமறியப்பேசியே படிப்பிக்கின்றனர். அவர்கள் கருத்தாவது—
இத்தேயத்து ஆண்பிள்ளைகள் முக்கியமாய்ப் பாதிரிகள் ஸ்கூலி
ல் இங்கிலீஷ படித்துத் தேர்ச்சியடைவதனால் தங்கள் இந்து
மதாசாரங்களில் விசுவாசமொழிந்து உள்ளத்தி லதவிஷயத்தி
ற் பற்றிலராய்த் தங்கள் பெண்டு பிள்ளைகள் முதலிய குடும்பங்
களின் பொருட்டு வெளிக்கு இந்துக்கள்போல் நடிக்கின்றவரா
யினர். ஸ்திரீகளுக் கவற்றுள் மிகப்பற்றுண்டாயிருத்தலினாலே
யே இந்து மதாசாரங்க ளின்னுஞ் சீவித்திருக்கின்றன. அதைச்
சம்மரிக்கவேண்டில், இந்துஸ்திரீகளை நம்பாடசாலைகளிலும்,
பாடசாலைக்கு வரக்கூடாத பருவத்தில் அவரவர் வீடுகளிலுஞ்
சென்று அவர்களை நம் வழியிற் பழக்கிவரில், சிலகாலத்திற்குப்
பின் நமதுழைப்புப் பலன்படும் "கொட்டவொத்து திட்டவொ
த்து,, என்பதேயாம். இக்கருத்தைப் பல சபைகளில் நம்மத
வைரிகளாகிய பாதிரிமார் கலந்து பேசி அதனைச் சாதிக்கும்பொ

[illegible]

ருட்டே பண்டுகள் (நிதிகள்) சேர்த்தும் ஆங்காங்கு பாடசாலைகளமைத்தும் "ஜனனமிஷன்,, என்னுங் கூட்டங்களை ஏற்படுத்தி வீடுகடோறும் கிறிஸ்தவமாதரையனுப்பி நம்பெண்களது புத்தியைக் கெடுத்தும், மற்றும் பல முயற்சிகளிற்றலைப்பட்டிருக்கின்றனர். இவ்விஷயங்களப்போதப்போதப்போது இங்கிலீஷ் சமாசாரப் பத்திரங்களில் வெளியாய்க்கொண்டு வருகின்றன. அவற்றை வாசிக்கு நம்மவர்களுக்குத் தெரியாததல்ல. பாதிரிகள் கருத்தெல்லாம் நம்மதத்தை எவ்விதத்திலேனும் பேதிக்க வேண்டுமென்பதேயன்றி வேறில்லை. அதற்குப் பெண்கல்வியேற்றவுபகரணமாயிருக்கின்றது. அக்கல்வியைமுன்னிட்டு நம்பெண்களுக் கவரது மதாசாரங்களை யூட்டியும், நமது மதாசாரங்கள் தோஷமுள்ளனவெனக் காட்டியும் வருகின்றனர். இல்லாவிடில், பெரும்பணத்தொகைகள் செலவழித்துப் பாடசாலைகளும், ஜனனமிஷன்முதலியனவும் பாதிரிகளேற்படுத்த அவசியம் யாது? நம்பெண்கள் கல்வி கல்லாவிடில் அவர்கள் குடிமுழுகிப்போவ தேதேனுமுண்டோ? இவ்வுண்மையை யுணராது நம்மவரிற் சில அவசரகாரர் பெண்கல்விவேண்டும் வேண்டுமென்று பாதிரிமார்களுடன் கூடிக்கொண்டு, கூத்தாட்டம் போடுவது எம்போலியார்க்குப் பெருந்துக்கத்தையே விளைக்கின்றது. பாதிரிமார்க ளப்படிக்கெல்லாஞ் செய்யவேண்டுவது அவர்கள் கடமையாதலால், அவர்களைக் குற்றங்கூறல் தருமமாகாது. இன்னும் அவர்களது விடாமுயற்சியைக்கண்டு நாம் நாணமெய்தல்வேண்டும்- பின்னை யாவரை இவ்விஷயத்திற் குற்றவாளிகளெனக் கூறல்வேண்டுமெனில்? நம்மைவிடக் கொடியகுற்றவாளிகள் வேறியாவருளர்? "கிளியைவளர்த்துப் பூனைவாயிற்கொடுப்பது,, போல் நமது பெண்கிளிகளைப் பாதிரிகளிடம் சேர்ப்பது நாமன்றோ? நமது கடவுள் பொய்க்கடவுள், நமது மதம் பொய்ம்மதம், நமது குலாசாரவழக்கங்கள் சரியானதன்று, விவாகாதிகாரியங்களில் நம்ம ஏற்பாடுகள் பெண்களின் சுதந்தரவுணர்ச்சிக் கினித்தானவற்று, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பென்னும் விலங்கைப் பெண்களுக் கிட்டது குரூரம் என்றின்னவாறு நம் வைரிகள் போதிக்க, நம்பெண்களதைக் கற்கும்படியேவுமவர் நாமன்றோ?

> "நிலத்தியல்பானீர்திரிந் தற்றுகுமாந்தர்க்
> கினத்தியல் பதாகுமறிவு. ,,

என்னுந் தெய்வவாய்மையினை யலக்ஷியஞ்செய்து நம்பெண்களை நமது மத வைரிக ளினத்திற் சேர்ப்பது நாமல்லது வேறியாவர்? வாய்மை விதியிலுள்ளவாறே அவர்களறிவுதிரிந்து நம்மை யோரோர் சமயங்களில் உல்லங்கனஞ்செய்யில் அதற்காக நம் பெண்களைக் குற்றங்கூறல் தருமமாகுமா? அல்லது அதற்காக வியசனப்படல் விவேகமாகுமா? ஒரோர் காலங்களில் பெற்றவயிறு பற்றியெரிய நம்மை நம்மக்கள் "அக்ஞானிகள்,, என வெறுத்துத் துறந்து அன்னியரினஞ் சேரத் துணியும்போது, பல்லைப் பல்லைக்காட்டிப் பதைபதைக்கில் அறிவுடையோர் நம்மை யிடிக்காமல் விடுவரோ? இப்படியானதற்குப் பிரத்தியக்ஷங்கள் நம்மில் ஒருவருங் கண்டதுங் கேட்டதுமில்லையா? ஓ! இந்துக்களே! தயவுசெய்து யான் சொல்வதற்குச் செவிகொடுங்கள். எந்தவிதையை விதைத்தீர்கள், அதற்குரிய பலனையே யறுப்பீர்கள். இது இயற்கையிலுள்ள விதி. ஆதலால் "வெள்ளம் வருமுன் அணைபோடுபவன் புத்திமான்,, வருமிட

[illegible]

ரறிந்து விலக்குபவன் விவேகி. அன்னியர்நோக்க மறிபவன் அறிஞன். இதைக் கேட்டீர்கள். இனி நீங்கள் செய்யவேண்டிய காரியம் யாது? பெண்களுக்குக் கல்வி அவசியமென்பது உங்கள் கருத்தாயின், காலவிரயஞ் செய்யாமல் ஆங்காங்கு சபைகூடுங்கள்; பண்டுகள் சேருங்கள்; சொந்தத்தில் பாடசாலைகள் வையுங்கள்; நமது வேதாகம சாஸ்திர புராணாதிகளின் உண்மைக் கருத்துகளை விளக்கும் பாடங்களை யேற்படுத்துங்கள்; பிரபஞ்சச் சிருஷ்டியில் மானிடப்பிறவியில் பெண்கள் ஏற்பட்டிருக்குமுத்தேசத்தையும், அவர்களுக்கும் புருஷர்களுக்குமுள்ள தாரதம்மியங்களையும் சம்பந்தாசம்பந்தங்களையும், கற்புமுதலிய ஸ்திரீகளுக்கின்றியமையாத் தருமங்களையும், அவர்கள் புருஷர்பாலொழுகவேண்டிய முறைமைகளையும், குடும்பங்களைத் தாங்கி அதனைப் பராபரித்துச் செவ்வனேநடத்துந் திறமைகளையும், அவர்க்குரிய மற்றும் பல தருமங்களையும் முக்கியமாய்ப் போதியுங்கள். இவற்றைக் கற்கவே அவர்களாயுசு சரியாயிருக்கும். அண்டங்களைப் புரட்டுஞ் சாஸ்திரங்க ளவர்களுக்கு வேண்டியதில்லை. மேல் ஸ்திரீதருமங்கள் நமது தர்மசாஸ்திரமுதலியவற்று ளேராளமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. காலதேச வர்த்தமானங்களுக்கிசைய அவற்றை யெடுத்தாளுங்கள். நம்மிற்சில, விரிந்த விசாரமற்று மிதந்த வறிவினராயுமுள்ள பேர்க்குச் சில விதிகள் குரூரம்போற்காணும். ஆனால், அவ்விதியில்லாவிடத்துண்டாகு மனர்த்தங்களைத் துரபிமானம்விட்டு யோசிக்கில் குரூரம்போய்க் குணமாய் முடியும். ஒருவேளை நம்மவர்களொன்றுகூடி ஆங்காங்கு சொந்தத்திற் பாடசாலை யமைக்க முடியாதொழியின், பெண்களை யன்னியரினஞ் சேர்க்காது அகத்தின்கண்ணே நிறுத்துங்கள். நமது மதவைரிகளிடங் கல்விகல்லாதொழிவதனால் குடிமுழுகிப்போவதொன்றுமில்லை. வீட்டில் தந்தை அல்லது சகோதரர் கல்வி கற்பிக்கட்டும்.

> ''பாதிரிமார்வைக்கும்பள்ளிக்குச்சென்றிடில்
> சாதிகெடுக்குமென் றுந்தீபற
> சமயமும்போகுமென் றுந்தீபற,,

தினகரன்

சு - மி.

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிப ருத்தரவாதியல்லர்.

இஷ்டர் அறிக்கை.

அத்துவைத சிரோன்மணிகள் மனம் ஓயாது குடிகொண்டு நிற்க, நடேசர் கூத்தாடிநின்று, ஆகாயலிங்கம் வசித்து, திருக்கழுக்கள் நித்திரைசெய்துவரும் சிதம்பரஸ்தலத்தில் உதித்து உலாவிவரும் **ப்ரம்மவித்தியாபத்திரிகை** நமக்கு இலவசமாக சமீபகாலந்தொட்டுவர, அதை நாம் விடாதுபடித்ததில், அதனால் மிக்க விசேஷங்களை அறிந்து அதை அனுப்பியவர்க்கு வந்தனம் சொல்லுகிறோம். அதன் சஞ்சிகை கரு- பக்கங்கள்கொண்ட திடகாத்திர சொரூபி- இதன் விலைவிகிதமோ அற்பத்தில் அற்பம். இதனிமித்தம் நாம் கொண்ட மனக்களிப்புக்கு அளவு

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃

[illegible]

[illegible]

[illegible]

𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂

[illegible]

மில்லை கணக்குமில்லை. அதில் வெளியாகிவரும் விஷயங்களோர் சாஸ்திரகர்த்தாக்கள் கூசாமல் பேசிய வாக்குகள். இத்தகைமையுடைய சஞ்சிகையை இஷ்டர்கள் தனித்தனி ஒவ்வொருவரும் படித்தறிவது முற்றிலும் ஒக்கும். இதனால் ஆத்தும பரீக்ஷைசெய்வதற்சன்றி வர்த்தமானங்களை அறிவதற்கும் உதகும். இந்தப் பத்திரிகையின் சஞ்சிகைகளை நாம தபால்மார்க்கம் பெறுவதற்குமுன் இஷ்டர்கள் அதை வாங்கிப்படித்து ஆனந்தமகொண்ட எட்டுநாளைக்குபபின் நம்மிடத்தில் வருகின்றது. ஆகவே, அதன்மட்டில் அறிவுள்ளோர் அத்தனைபெயரும் வாஞ்சையாயிருக்கிறார்களென்பது திருஷ்டாந்தப்பட்டது. இந்தப் பத்திரிகையில் தோன்றிவரும் குலமக்கள் அத்தனைபெயரும் அறிவு மிகுந்த சுகுண சுகிர்தாலங்காரராயிருந்தாலும், போந்தமட்டும் பள்ளிப்பழக்கம் பயின்றிராத நாம் நமக்குத் தோன்றியதை இந்தப் பத்திரிகையில் பேசாது மௌனமாயிருப்பது சுகிர்தமல்ல. ஆகவே, பத்திராதிபர் நமக்கு உத்திரவு அளித்து பத்திரிகையின் ஓர் மூலை தந்திட்டால், நமக்குத் தோன்றியமட்டில் ஏதேனும் விஷயங்களை உளறி விடுவோம். பத்திராதிபர் வாக்குக்கும் இஷ்டர்கள் மொழிக்கும் எதிர்பார்த்து நிற்கிறோம்.

இஷ்டர்களே வந்தனம்.

கோள்ளேகாலம் நேசன்.

வைராக்கியம்.

நாம் இந்தப் பத்திரிகையில் ஏதும் விஷயங்களைப் பேச முயலுமுன் பத்திரிகை பிறந்த நோக்கத்தையும் அதில் வெளியாக வேண்டிய விஷயங்களின் இயல்பையும்தொட்டு தீர்க்காலோசனைசெய்து இதற்கு கையேந்தவேண்டும். பத்திரிகை வேதாந்தவிஷயங்களை வெளிப்படுத்த ஏற்பட்ட கருவி. அக்கருவியில் பிரபஞ்ச வியாபாரவிஷயங்களைத்தொட்டு பேச நிமித்தமில்லை. அவைகளை வெளியிட எண்ணிறந்த வாத்தமானப்பத்திரிகைகள் உண்டே, ஆகவே, இந்த நம்பத்திரிகையில் துவைதம், அத்துவைதம், விசிட்டாத்துவைதம், சிவமதம் முதலிய விஷயங்களை ஒளியாது நீட்டி எழுதுவது ஒக்கும். மேலே சொன்ன துவைதம் முதலிய மூன்றைச் சொல்வதற்கு நமக்குப் போந்தமட்டும் ஞானம் இல்லாவிடினும் நாம் சாஸ்திரமுன்னிலையில் அறிந்தவைகளைப் பத்திராதிபர் உத்திரவு பிறந்தபின் ஒருவாறு அயற்சார்பாகவாயினும் பேசிடுவோம். அந்தவகை உத்திரவு பிறக்குந்தனிலும் பேசாது மௌனம்சாதித்திடாது வைராக்கியத்தை இஷ்டர்கள் அறியுமாறு எழுத இறகுகைகொண்டோம்.

சர்வசாக்ஷிமயமா யிருக்கின்ற சுத்தபிரம்மம் என்றுமுளது. அதனிடத்தில் சமுத்திரஜலத்தில் அலையுண்டானதுபோலவும் காற்றில் பரிசம் உண்டானதுபோலவும் சத்தி ஒன்று தோன்றியது. அந்த சத்திக்கு மூலப்பிரகிருதி என்றுபேர். இந்த மூலப்பிரகிருதியின் பலத்தினால் சுத்தப்பிரம்மம், கூடஸ்தர் எனவும், பிரம்மம் எனவும் இருவகையாயிற்று. [☞ இவைகளின் விகற்பத்தையும் ஏனையவைகளின் விவரங்களையும் பிறகிட்டு காலமும் சமயமுமறிந்து தெள்ளத்தெளியவெளியிடுவோம்] கூடஸ்தபிரம்மத்திலிருந்து மாயையின் சம்மந்தத்தால் பிரணவம் பிறக்க, அதனால், சாத்துவிக, இராசத, தாமதங்கள்பிறந்தன. இந்த மூன்று குணங்களின் சுபாவங்களை இப்பொழுதே பேசிட

[illegible]

நிமித்தமில்லை. தாமதகுணத்தில் விக்ஷேபசத்தி, ஆவரணசத்தி என இரண்டு சத்திகள் பிறந்தன. விக்ஷேபசத்தியினின்று காரணபிரபஞ்சம் சூட்சுமதேகபிரபஞ்சம் தூலதேகபிரபஞ்சம் மூன்றும் பிறந்தன. காரணபிரபஞ்சம் மறுஜனனத்திற்கு நின்றுவிட, ஏனைய பிரபஞ்சங்களினின்று சத்தப் பரிச ரூப ரச கந்தங்கள் பிறந்தன. அவைகளினின்றும் தனித்தனி சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூன்று குணங்களும் அந்தந்த குணங்களின் இயற்கைக்கு ஏற்குமாறு அந்தந்த சூட்சுமதேகங்களும் அவைகளினின்று சமட்டி வியட்டிகளும் அவைகளின் இயல்புகளுக்குத்தக்க தத்துவங்களும் பிறக்க, அவைகளினின்று உண்டான மூன்று குணங்களில் சூட்சுமத்திற்கு செலவுண்டுபோன சாத்துவிக ராசதங்கள் போக மீதி தாமதத்தில் அதனதன் குணத்திற்கு ஏற்றபடி தூலதேகம் பிறந்தது அந்த தூலதேகத்திற்கும் சூட்சுமதேகத்திற்கும் முதற்காரணமாய் நிற்கும் மனதையும் அந்த மனதின் சொயரூபமாகிய விவேகமென்னும் அறிவுக்கும் உள்ள விசற்பத்தைக் கண்டுணர்ந்தால் நாம் யாரென்பது திட்டமாய் வெளிவரும். அவை வெளிவருவதற்கு நம் வாக்கை முற்றமுடியக் கேட்கவேண்டும். சிரவணம் மனன நிதித்தியாசனங்களால் அறிவு தெளிந்து நானே பிரம்மம் என்பது பூர்த்தியாய் அனுபவத்தில் உணரலாகும்; ஆனாலும், ஐயோ, நாம் சில முக்கியமான விஷயங்களை பத்திரிகையில் வெளியிட சாத்தியமில்லை. முதலில் வைராக்கியத்தைத்தொட்டுநின்று பேசிடுவோம். நாம் பேசும் அத்தனையையும் இஷ்டர்கள் செவிகொடுத்துக் கேட்பதோன்றொழிய தூஷிக்க வரலாகாது. நமக்குத் தோன்றியதையும் சாஸ்திர கர்த்தாக்கள் அனுபோகத்தில் கண்டுணர்ந்ததையும் மட்டும் பேசுவதினால், நாம் பிறப்பித்து உளறிவருவதாய் எண்ணி சமயவாதிகள் எவரும் கோபமூண்டு நம்மை எடுத்தெறிந்து அவலமாக வெட்டெனப்பேசாதிருப்பார்களென்று நம்புகிறோம். கடந்துபோன சமீபகாலத்தில் நாம் பிரம்மத்திற்கும் மாயைக்கும் உண்டாயிருக்கும் விகற்பத்தைத்தொட்டு பேசியபொழுது, சமயவாதிகள் இரண்டொருவர் வாதானுவாதங்கள் செய்து நம்மை வரம்புகடந்து பேசிட்டார்கள். சமய பிடிவாதர்களுக்கு கோபம் தீபோலப்பற்றி எரிவது இயற்கை என்பதை எண்ணி சமாதானம் பேசிவந்தபின், அவர்கள் உள்ளது உள்ளபடி மொழிந்ததையும் நாம் பேசியதையும் ஒப்பிட்டுப்பார்க்க ஒரு எழுத்தும் பிசகாது ஒன்றுபட்டுவந்தது. ஆகவே, எவரும் பிறர் சொல்வதை ஆறி அமர்ந்து யோசித்திட்டால் சுகிர்தமுண்டு.

முதலில் விவேகத்திற்கும் மனதிற்கும் உண்டான வாதானுவாதங்களைச்சொல்லி, பத்திராதிபர் அனுமதிதந்திட்டபின் மற்றவைகளை கூசாது எழுதுவோம். வாயுவில் பிறந்த மனதின் வசியமில்லாது விவேகம் தலைநீட்ட முடியாதுபோனதினால், பின் தொடரும் வாக்குகள் பிறந்தன. அது இது:—

விவேகம்.—நெஞ்சமே நீ சுகமாய் வாழ்ந்கடவாய்.

மனம்.—எல்லாக் காலத்திலும் உடலும் உயிரும் போலவும், சேறும் நீரும்போலவும் உம்முடன் பிரிவற்றிருந்த என்னை நீர் இப்போது பிரிந்துநின்று தோத்திரம்பண்ணியதென்ன?

விவேகம்.—நீ க்ஷணப்பொழுதாயினும் ஓரிடத்தில் நில்லாது குரங்குபோல பயனற்று விஷயங்களில் செல்லுகிறாய்; அவ்வண்ணம் செல்லாது ஒரு இடத்தில் நின்று எனக்கு ஒரு சொல்

[illegible]

சொல்லவாயர்க-

மனம்:—நான் சொல்லத்தகும் சொல் என்ன இருக்கிறது? தாங்கள் சொன்னால் நான் கேழ்க்கிறேன்-

விவேகம்:—கழிந்துபோன அனந்தங்கோடி ஜனனங்களில் ஈசுரனை நோக்கி கேட்டபடி அவர் பரிதபித்துக் கொடுத்ததால் இவ்வரிய மானிடதேகம் கிடைத்தது-

மனம்:—இது திண்ணந்தான்-

விவேகம்:—வந்த வரவை மறந்து பந்தமுள உன்னைக் கற்பித்தவர் யார்? மண் பொன் பெண்ணில் ஆசைகூர்ந்து காலங் கழிப்பதென்ன?

மனம்.—தேகக் கூறுக்கு ஏற்குமாறு போகங்களை அனுபவியாது விடுவோமா? பிறகிட்டு ஈசுரகட்டளையை தலைமேற்கொண்டு நடக்கலாம்- நீர் துரிதம் செய்வது ஏன்?

விவேகம்.—இந்த தேகம் கற்பகாலம் இருப்பதல்லவே, இதற்கு சாஸ்திரப்படி குறித்தது நூறுவருஷம்- அந்த நூறுண்டிலும் நித்த நித்தம் வரும் கண்டங்கள் ஒன்றோ அல்ல பலவுண்டு- ஆதலின் அடுத்த நிமிஷத்தில் தேகம் விழினும் விழும்.

மனம்.—நாம் அறியாது தேகம் விழினும் விழட்டும்- அடுத்துவரும் ஜனனத்தில் ஈசுரனிடத்தில் சொல்லிவந்த விஷயத்தை நிறைவேற்றலாமே-

விவேகம்.—அப்படி அடைவதும் சாத்தியமல்ல- அடுத்துவரும் ஜனனம் மானிடஜனனமென்று நிச்சயிக்கக்கூடாதே- சாகுங்கால் கொண்ட இச்சைப்படிக்கல்லவோ ஜனனம்வருமென்று வேதங்கள் ஓலமிடுகின்றன- வந்துற்ற ஜனனத்தைவிட்டு வேறுவகை ஜனனத்தை அடைந்து, சென்ற ஜனனத்தில் வாக்கிட்ட காரியம் செய்யவில்லை என்று சொல்லிடில் ஈசுரனுக்குக் கோபம் மூண்டு பின்னும் மானிட ஜனனத்தைக் கொடாரே; கொடுப்பாரெனில், அநேகங்கோடி ஜனனங்கள்தோறும் ஓயாது கேட்டாலல்லவோ கொடுப்பார்- கொடுப்பினும், அப்பொழுது இந்த விவேகம் உண்டென்பது நிச்சயமல்லவே.

மனம்.—நீர் பேசியது அத்தனையும் வாஸ்தவமாயிருக்கலாம்-

விவேகம்.—நாம் மேலே சொல்லியது நிஜமென்று விசாரித்தறிவாயானால், இந்த தேகம் இருக்கும்போதே ஈசுரனைத்தொழுது, நீ யார் என்பதை அறிந்து ஏழுவகை பிறவிகளையும் நீக்கிக்கொள்ள எத்தினப்படுவாய்- இதை சிந்தித்துப்பார்-

மனம்.—நீர் கூறியது உண்மையானதினால் இனி வீணில் காலம் கழிக்காமல் நான் யார் என்பதை விசாரிப்பேன்-

விவேகம்—ஐயோ நீ கேள்: பெண்டீர் புத்திரர் முதலிய குடும்பச்சேற்றில் விழுந்து மனமுறமருகி நின்று விட்டாய்- நாளை சாவ்காசமோசத்தால் உன்னெதிரே தோன்றும் கோரவடிவான யமனும் ஓலையும் வரும்பொழுது இப்பெண்டீராதி இவர்கள் துணையாவரோ?

மனம்—நீர் கூறியது வாஸ்தவம்- பெண்டீர் முதலியவர்கள் துணையில்லார் என்பது திண்ணந்தான்; ஆனால், அவர்களை கைவிட்டால் அவர்கள் பரிதபிப்பர் என்றும் பிறகு அவர்களை பாதுகாக்கிறப்பவர் எவருமில்லையே என்றும் அவர்களைக் கட்டிப்பிடித்திருக்கிறேன்-

விவேகம்—மேற்கூறிய பெண்டீர்பிள்ளைகளுக்கு நீ துணையாவது சாத்தியமல்லவே- மகாராஜன் துறந்தபொழுது மனைவி

[illegible]

[illegible]

வந்து அவர் காலில் விழ உனக்குப்புருஷன் சிவன் அவனைச்சேர்ந்து சுகித்திரு என்று சொல்லியதை மறந்தாயா?

மனம்.--மனைவிமுதலியவர்களை காப்பவர்யாரென்றுவிடுவேன்?

விவேகம்.—உன்னை யமன் கொண்டுபோம்பொழுது, மீண்டும் இப்பூமியில் வந்து இந்த ஜீவர்களை எப்பொழுதும்காப்டாயோ? அல்லது சுகமே இருக்கிறீரா என்று கேழ்க்கவும் சாத்தியமுண்டோ?

மனம்.—ஆனாலும், யான் அவர்களை இருக்குந்தனிலும் காப்பேன்.

விவேகம்.—நீ இருக்கும்போதாயினும், வேந்தர் முதலாயினோர் உன்னைப் பிடித்துக்கொண்டுபோனால், அல்லது, அவர்களைப் பிடித்துக்கொண்டுபோனால் அப்பொழுது நீ காக்கிறாய் என்றது என்னமாச்சுது?

மனம்.—ஆம் ஆம், அப்பொழுது நான் சாக்க எத்தனமில்லை தான்.

(இன்னும்வரிற் பின்னும்வரும்)

இஷ்டர்களே அநேக வந்தனம.

கொள்ளேகாலம் நேசன்.

காரணமே காரியம்.

காரணமென்றுங் காரியமென்று மெடுத்துக்கூறப்படு மிரண்டனுள்ளும் காரணங் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது; காரிய முன்னின்மைக்கு எதிர்மறை. காரணம் மண்; காரியங் கடம். மண்ணாகநின்ற ஞான்றுங் கடமின்று; கட மழிவெய்திய ஞான்றுங் கடமின்று; இடையேமாத்திர முளதாமெனப்படும். அற்றை ஞான்று மாராயுங்கால் மண்ணையன்றிப் பொருட்பேறின்று. வளைவு குவிவுமுதலாய குணங்கள் நவமாகத் தோன்றியமையானே அதனைக் கடமெனக்கூறுதுமெனின், அவ்வளைவு குவிவு முதலன குணமேயல்லது குணியன்றென்க. அக்குணமுங் குணியாய மண்ணின்பாலதாகத் தோற்றப்படும். மேலைக்கூறற்பாலதாய குணங்கள் தோற்றுவதற்கு முன்னரும் உருவைக்குணத்தி னிகழ்ச்சியல்லது வேறு நிகழ்ந்துளது. குணமோ பொருளன்று- அக்குணந்தா னுளதோவெனின் அஃதுஞ் சொன்மாத்திரையாயும், தோற்றன்மாத்திரையாயுமல்லது உண்மையானிலதென்பது திண்ணம். அற்றாகலின் உளதாயது காரணமாய மண்ணேயாம்; காரியமென்பது தோற்றுதலும், நிகழ்தலும், அழிவுபாடெய்தலும் திரிபுணர்ச்சியேயன்றி வேறன்றென்க. இதனைச்சுட்டி முன்னர் நன்கு விளக்கினாமாண்டையோர்ந்துணர்க-

இனி மண்ணே கடமாகக் காணப்படுவதன்றி மண்ணேபோலுங் கடமுமோர் பொருளன்று. கட முக்காலத்து மின்றென்பதுவே திண்ணம்- உளதாகத்தோன்றுந் தோற்றமு மண்ணின் தோற்றமல்லது வேறன்மையின் கடமென்பதோர்பொருளுளதாயவழித் தோன்றிய தோற்றமேயன்று. அற்றாகலினன்றே காரணமேகாரியமாமென்பது தெற்றென்றுணர்க- ஒன்றே விவகாரத்தின்கண் இரண்டாக விவகரிக்கப்பட்டதேனும் உண்மையானே பொருளிரண்டன்று, ஒன்றேயாமென்க. இந்து.

காரிய காரணம் திண்ணமன்றென்பது.

காரியமென்பது தோற்ற நிகழ்ச்சியேயன்றிப் பிறிதின்மையின் காரியமென்பது முக்காலத்தினு மின்றெனக்கூறினுங் காரணமென்பதுளதேயெனின் கட்டுரைக்குதும்:—

[illegible]

[illegible]

காரியமேயின்றல் காரணமென்பதியாண்டையது? காரிய நிகழ்ச்சியானன்றே காரணமென்று கூறப்படுவது? காரியமே யிலதாயின் காரணமென்னுங்கூற்றுப் பயனில்கூற்றென்றொழிக. ஓரோவொரு தந்தைக்கு ஓர் மகனுளனாயின் அவன் முன்னோனெனற்பாலனா? பின்னோனெனற்பாலனா?

முன்தோன்றியோனுளனாயின் பின்னோனென்றும், பின்றோன்றியோனுளனாயின் முன்னோனென்றும் கூறுந்தகையதன்றி, யோர் மகனையே முன்னோனென்றும் பின்னோனென்றுங் கூறவியலாதே. முன்னோனென்னுமொழி பின்னோனையும், பின்னோனென்னுமொழி முன்னோனையும் விடாமே *தாப்பிசைத் தொடர்பேபோன்று கோவைப்பட நிகழலின், ஒன்றனைவிட்டொன்று பிரிவெய்தா. இவ்வாறே நன்மையுந் தீமையும், ஒளியும் இருளும், உயர்வுந் தாழ்வும், இவைபோல்வன பிறவும் காணும்பகுதியவாம். நூலொன்றனைக் கண்டு இஃது பெரிதென்னுஞ்சொன்னிகழின் சிறிதென்னுஞ் சொல்லைத் தழுவியேயுள்ளது. சிறிதென்னுஞ்சொல் இன்றாயின் பெரிதென்றியாங்ஙனங் கூறும் பகுதிய. ஆதவனைச்சுட்டிப் பெரியனோ? சிறியனோ? வென்றுசங்கைநிகழின் பிறிதோராதவன் இருக்கினன்றி யிரண்டினொன்றியம்பற்பாற்றன்று.

கடமென்பதின்றாயினதற்கிட்ட காரியமென்பதோர் பெயருமின்றாம். காரியமேயின்றாயின் அதனை யிகவாது தொடருங் காரணமென்பதேது? காரணமின்றேற் காரணமெனும் பெயருமின்றாமன்றே? இதனானே மண்ணென்பதோர்பொருளுமின்றெனப் பகர்ந்ததன்று. அம்மண்ணுக்குக் காரணமென்னுஞ்சொன்னிகழ்ச்சியின்றென்றாம். ஓரே மண் விவகாரகாட்டத்திற் காரணமாகவும் காரியமாகவும் விவகரிக்கப்பட்டு உண்மையானாராயின் மேலை விரித்த விரண்டுமின்மையாய் நிகழ்கின்றன. காரியமாக நிகழ்ந்ததூஉ மண்ணேயாம்; காரணமாக நிகழ்ந்ததூஉ மண்ணேயாம்; காரணத்தையன்றிக் காரியமின்றெனக் கூறற்கிடனாகின்றதூஉ மண்ணொன்றே. காரியம் காரணமிரண்டும் கால மூன்றினும் இன்றாக முடியும். உளதாதலு, நிற்றலு, மழிவுபாடெய்தலு மின்றெனற்கு முன்னர் நின்றதூஉமோர் மண்ணேயாம். ஓர் மண்ணே கடமுதலனவாயும், அவையல்லவாயும், விகாரமெய்தியு, மஃதின்றியும், களங்கமுடைத்தாயு, மங்ஙனமன்றாயும், பலவாயும், அங்ஙனமன்றாகியும், காரியமாயும், காரணமாயு நிகழ்கின்றது. விகாரப்படுதன்முதலன வின்றேனும் விகாரமின்மை முதலன கூறற்பாற்றேயெனின், விகாரங் காரணமாக விகாரமின்மை நிகழ்தலின் விகாரப்பாடெய்தானான்று விகாரமின்மையெனப் பகர்தலுங் குற்றந்தங்குதற்கிடனாம். ஆகலின் விகாரம் விகாரமின்மைமுதலன வனைத்துங் கற்பனைக்கிடனாம். இதனானே மண்ணொன்றேயுளதெனவும், அதற்குக் காரணமென்றுங் காரியமென்றுங் கூறுதல் கற்பிதமென்றும் பெற்றாம். இந்து.

ஸம்ஸ்கிருத புத்தகசாலை.

இவ்வுலகத்தில் நமது முன்னோர் தமது வாழ்நாட்களை உலகத்தார் சுகமடையக்கருதி அலக்ஷியஞ்செய்து, தன்னினத்தாரும் மற்றவரும் தமக்கின்றியமையாத சங்கதிகளைத் தெரிந்துகொண்டு, அதனால் இம்மையிலும் மறுமையிலும் பெறவேண்டிய சுகங்களுக்குப் பெருங்கருவியாய்நின்ற பல நூல்களை இயற்றி

* தாப்பிசை- சங்கிலி-

[illegible]

னர் என்றும், அவைகளை நடுநாட்களிலுநிக்த சிலர் வெளிவரவொட்டாது தடுத்தார்களென்றும், தற்சாலத்தில் அவைகளை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது நமது சுதேசிகளுக்கு அவசியமென்றும் முன்னமே ஒருவாறு எழுதினோம். தஞ்சாவூர்ஜில்லா மாயூரம்தாலூக்கா திருவாலங்காட்டில், சுமார் மூன்றுவருஷகாலங்களாய் நடந்தேறிவரும் ஓர் புஸ்தகசாலையைக்குறித்தும் நாம் முன்னரே சில சங்கதி எழுதினோம். இப்பொழுதும் நாம் அப்புத்தகசாலை கண்டும், அதிலுள்ள புஸ்தகங்களைப்படித்தும், அவ்விடத்தின் சுகத்தைக்கண்டு திரும்பவும் எழுத இறங்கேகிறோம்.

இந்த புஸ்தகசாலை முக்கியமாய் நமது தேசத்தில் வாழ்ந்துவரும் ஆரியர்களின் குலதனமான சம்ஸ்கிருதபாஷையை விருத்திசெய்யவும், அநேகமாய் அருமையானதும் விலையுயர்ந்ததுமான புஸ்தகங்களைத் தாமே சம்பாதித்துப்படிக்கத் தன சௌகரிய மற்ற சுதேச வித்துவான்கள் **சந்நியாசிகள்** இவர்களின் உபயோகத்திற்காகவே ஏற்பட்டது இந்தப் புஸ்தகசாலைக்கு ஸ்தாபகரும் தற்கால மானேஜருமான ஸ்ரீ எஸ். வெங்கிடராமையர் என்பவர் தமக்குள்ள தைரியமேலீட்டினால் எடுத்துக்கொண்ட ஓர் விடாமுயற்சியினால், அநேக சுதேச கனவான்களும், அநேக ஐரோப்பியர்களும், நமது கவர்ன்மெண்டாரும் ஆதரிக்கத்தக்க நிலைமை இந்தப் புஸ்தகசாலை பெற்றது. இப்புஸ்தகசாலை ஏற்பட்டு நடந்துவருமிடம் அதின் பிரயோசனமுற்றிலும் கைகூடத்தக்க இடமே. ஏனெனில், முக்கியமாய் அவ்வூரின் அருகில் விளங்கிவரும் திருவாவடுதுறையென்னும் ஓர் திவ்வியக்ஷேத்திரத்தில் வெகுகாலமாய் நிலைபெற்றுவரும் ஓர் சைவசித்தாந்தவாதீனத்தில், தற்காலம் பட்டத்திலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியபண்டாரச்சந்நிதிகள் என்கிற தானகர்ணனின் கொடையைப் பெறுதும், அவர்கள் குணங்களுக்கு புகழை பதிலளிக்காதும் உள்ள வித்துவான்கள் தென்னாட்டிலில்லையென்றே சொல்லலாம். அவர்களது போஷகத்தினால் ஒவ்வொரு வித்துவான்களும் வந்து சிறிதுகாலம் வசித்துக்கொண்டு தமக்கு வேண்டிய சங்கதிகளைப் படிக்க யாதும் தடையில்லை. ஊரும் மிகச் சுககரமாய் சீதோஷ்ணங்கள் சமமாய் காவேரியின் கரையோரம் உள்ளதாதலால், எந்த சந்நியாசிகள் வந்தபோதிலும் உபசரித்து அவர்களுக்குத் திருவமுதளிக்கத்தக்க பெரிய மகாப்பிராமணர்கள்கூடிய நாலு அக்கிரகாரங்களும் இருக்கின்றன. அப்புஸ்தகசாலை சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப்போல மென்மேலும் விருத்தியாய்க்கொண்டேவர, தற்காலம் **பொன்மலர்நாற்றமுடைத்து** என்பதுபோல நமது ஆரியபாஷையின் அடுத்ததும், மற்ற எல்லாவற்றிலும் சிறந்ததும், நமது தென்னாட்டாருக் கின்றியமையாததுமான தமிழ்ப்பாஷையில் உள்ள அநேக புஸதகங்களைச் சேர்த்துவைக்க உத்தேசித்து அவ்விதமும் நடத்தக்கேட்டு மிகக் களிகூர்ந்தோம். அகத்தியமுனிவர் முதலிய மகான்களின் நாவில் இவ்விரு பாஷைகளும் சகோதரிகள்போல விளையாடிவந்ததைக் கேட்டுள்ள நமக்கு நிதரிசனமாய் இவ்விடம் இவ்விரு பாஷைகள் சேர்ந்து விருத்தியடைவது வியக்கத்தக்கதல்ல. இத்தகைப்பெருமை எக்காலத்திலும் இப்புஸ்தகசாலைக்கு இருக்கவேண்டி அதற்கு ஓர்கட்டிடமும், அவ்விடத்துக்கு வேண்டிய சில குமாஸ்தாமுதலியவர்களுக்கு அளிக்கவேண்டிய பொருள்களுக்காக மூலதிரவியமும் சிலது வேண்டியதவசியமென்பது எல்லாக் கனவான்களும் அறிந்த சங்கதியே. அதுவிஷயத்தில் நாம் முன் எடுத்தெ

[illegible]

[illegible]

மூதிய ஸ்ரீலஸ்ரீபண்டாரச்சந்நிதியவர்கள் ஓரிடத்தக்கு வேண்டிய பொருளுதவி செய்ததாய்க்கேட்டு மனங்கொள்ளா வானந்தமடைந்தோம். மேலும், எக்காலத்தும் இதற்கு ஒரு கெடுதிவராமற் காபபாற்றி யபிமானிக்கவேண்டி கனவான்கள் கூடிய முயற்சி யெடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம். தற்காலம் இச்சாலையிருக்குமிடம் தென்னிந்தியா ரெயில்வேயில் நாரசிங்கம்பேட்டைக்கு ஒரேமயில் தூரம்.

ஓர் தமிழன்.

வைணவருக்கு அறிக்கை.

ஸ்ரீராமாநுஜமுனிவர் சம்பிரதாயத்தை யனுசரிக்கும் ஹிந்துக்களே! சிறிது கவனியுங்கள்! தங்கள் மதஸ்தருக்கு உயிருக்குயிராய் கருணைக்கடலாய் கல்வியில் வல்லவராய் கவிதார்க்கிக சிங்கம் என்கிற பெரும்புகழடைந்து, சர்வதந்திர சுவதந்திரனுய ஸ்ரீமானுடையவர்சித்தாந்தத்தையுள்ளத்திலமைத்து, அதை நிலைநாட்டக்கருதி வெகு பிரபந்தங்களையியற்றி, பரமகிருபாநிதியாய ஸ்ரீ திருவேங்கடமுடையான் திருவாய்மலர்ந்தருளிய "வேதாந்ததேசிக,, ரெனத் திருநாமம்பூண்டு, அத்திருநாமத்தால் அனைவரும் வழங்க பெரியோரிட்ட பெயர் மறக்கும்படி புகழ்பெற்று ஸ்ரீமான் வெங்கடநாதன் என்னுந் திருநாமம் பூண்ட ஆசிரியமணி யொருவர் இருந்தது நீவிர் அறிந்திலரோ? அம்மகான் இல்லறத்திலிருந்தும் இம்மையிலும் மறுமையிலும் உள்ள சுகத்தைத் திரணம்போல் நினைத்து உலகத்திற்குழைதது, அலைபுரண்டதோர் சமரார்நதியின் அருவிக்கொப்பான திவ்விய மகிமைபொருந்திய தமது திருவாக்கால் உலகெலாம் மகிழும்படிசெய்து, வைராக்கியத்தையே தனமாய்க் காப்பாற்றி, மண்ணுலகத்தை வெறுத்துக் கண்ணன் விண்ணுலகிற் கேகினர். ஐயா! நண்டர்களே! பின்னுதித்தவர் அவர் திருவுருவை ஆலயங்கடோறு மமைத்து அகிலேசன் திருவுருவிற்கொப்பா யருச்சிக்கக் கண்டோமேயன்றி, அவர் திருவாக்கின் மகிமையைப் பெருக்க எவரும் வெளிவந்தாரில்லை. அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! இவ்விதம் அவ்வாசிரியன் கருத்தல்லவே. தன்னுருவையேனும், அதற்கிணையாய மற்றொன்றையேனும் அவசியமாய் ஆராதனம் செய்வதால் அவ்வளவு ஆனந்தங்கொள்ளார். உள்ள காலத்தில் சுகத்தையும் மற்றவர் பகழையும் பொருளாயெண்ணுத அம்மகான் தமது சரீரத்தைத் துறந்தபின்னரா அவ்வெண்ணங் கொள்வார்? எவ்விதமும் தாம் எழுதிய புஸ்தகங்களை மற்றவர் படித்துத் தத்துவங்களை யறிவா ரென்பதல்லவா அவரது கருத்து? அதையுணராது அவர் திருவுருவை வைத்துப் பூசித்தாற் போதுமென்றெண்ணி, அம்மதஸ்தர் வீணிற் காலங்கழிப்பது நன்றல்லவே. தாமும் அவர் திருவாக்கை வெளியிட முயலார். முயலு மற்றவருக்கும் சகாயஞ்செய்யார். இஃதென்ன கொடுமை! சிறிதுகாலஞ்சென்றால் அவரது சிலாமூர்த்தி மாத்திரம் மிச்சமாய்விடும். அநேகமாய்க் கிரந்தங்கள் சிதல்களின்வாயி லகப்பட்டன. அபிமானிகளே! இனியாவது வீணுசம்பங்களை விடுங்கள்; ஆங்காங்கு கூடுங்கள்; அவரது திருவாக்கை வெளியிடுங்கள்; துர்வாதங்கொண்ட நாத்திகத்தைக் கெடுங்கள்; அங்ஙனஞ்செய்பவர்க் குதவிபுரியுங்கள்; அவ்விதஞ்செய்யாது ண்டுறங்கவேண்டாம். மதங்களும் சாஸ்திரங்களும் விருத்திக்கு வருவதே ஆசிரியர்கள் கருத்தெனக்கொள்க

ஓர் அபிமானி.

வேண்டுமென்றிக் கவர்ன்மெண்டாரால் வலியக்கிடைக்குமென்பது கனவினும் கனவே. நாம் மவுடீகமாகவிருக்கும் வரையில் அங்கிலேயர்க்கு மிக்க கொண்டாட்டந்தான். நம்மவர்க்கு யாது புத்தி கூறினும் தேச நன்மையைக்குறித்து அக்கறையுண்டாவதில்லை; ஒற்றுமை கிடையாது; நெல்லிமூட்டையை அவிழ்க்கின் அதது தன் தன் பாட்டிற்கு எப்படியோடுகின்றதோ அப்படி ஒருவர் போனவழி ஒருவர் செல்வதில்லை; தேசாபிமானமென்பதின்னதென அறியார்; கவர்ன்மெண்டார் செய்யும் குற்றங்குறைகளைப் பட்டப்பகலாக எடுத்துக்கூறும் பத்திரிகைகளை வாங்கிப்படிப்பதில்லை. சபைகூடித் தங்கள் தங்கள் வருத்தங்களை வெளியிடார்; இத்தேசத்திற்கு வெள்ளைக்காரரால் நேர்ந்திருக்கும் துன்பங்களைநீக்கிக்கொள்ள மார்க்கமிருந்தும் அதற்காக முயற்சிக்கமாட்டார். இங்ஙனமே யிருப்பாரானால் வெகுசீக்கிரத்தில் ஆடுமாடுகளைப்போல் அடிமைப்பட்டுக் குடிக்கக்கூழும் உடுக்கக் கந்தையுமின்றிக் கிடப்பார்கள். எந்தெந்தக்காலத்தில் எந்தெந்த விதமாய் முன்னுக்குவரவேண்டுமோ அந்தந்த விதமான முயற்சி செய்யாவிடில் ஜாதிபோய் மதத்தையிழந்து ஜீவனமின்றி அலையவேண்டும்

இந்தியாவிலுள்ள பணமெல்லாம் இங்கிலாந்துக்குச் செல்கின்றன; இந்தியா, தனது செல்வத்தை இங்கிலாந்துக்குத் தத்தம்செய்து அங்குள்ள தரித்திரத்தைப்பெற அபேக்ஷிக்கிறது; பெரிய வர்த்தகங்கள் அங்கிலேயர்கையில் சிக்குண்டன; அற்ப வர்த்தகமாத்திரம் கிழவன்கை ஊன்றுபோல் இங்கு நிற்கிறது; கல்வியில் அவர் கரையேறுகின்றனர்; நாமிறங்கிப்போகிறோம்; இங்குள்ள கைத்தொழிலாளிகளுடைய வாயில் மண்ணைப்போடச் சீமையிலுள்ள சரக்குகள் வந்துகொண்டிருக்கின்றன; ஏழைகள் வெகுபேர் பட்டினிகிடக்கின்றனர்; வெகுபேர் மோரீசு ரங்கூன்முதலிய விடங்களுக்கு ஓடிப்போனார்கள்; இன்னும் காலம் செல்லச்செல்லக் கூலிவேலையும் கிடைப்பதரிதாய் விடுமாகையால் புத்திமான்கள் தேச க்ஷேமம் பெறத்தக்க காரியங்களை யோசிக்கவேண்டியது. இந்துதேசம் பூர்வம் எவ்வளவு கௌரவமாயிருந்ததோ அவ்வளவு இனி அகௌரவமாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆதலால் நண்பர்காள்! ஜாக்ரதை! ஜாக்ரதை!! "வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர் வைத்தூறு போலக்கெடும்," இக்குறளின் பொருளைச் சிந்தியுமின் சிந்தியுமின்.

தேசநன்மை நாடுவோன்.

சுவிசேஷ போதகர் வித்தியா வகுப்பு

ஐயா,—சமீபகாலத்தில் கொள்ளேகாலத்தில் பாடசாலை இல்லாக்குறையைக் கண்டு குலமக்களும் தலைமக்களும் ஒருங்குகூடிச் சபைசேர்ந்து பாடசாலைஏற்படவேண்டியதைத்தொட்டு ஆலோசனை செய்தார்கள். அதில் லோகல்பண்டு பாடசாலை அங்கு ஏற்படுவது நலமென்றும், சிலர் அந்தப் பாடசாலை சமயத்திற்கு உதவாதென்று கண்டு சுவிசேஷ போதகர்கள் பாடசாலையையே உடனே ஏற்படுத்தக் கேட்பது நலமென்றும் பேசினர். இப்படிப் பேசிய வாதானுவாதங்களுள் அறிவு அசலப்பெற்ற குலமக்கள் பெரும்பாலார் லோக்கல்பண்டு பாடசாலை வருந்தனினும் எதிர்பார்ப்பதொழிய, நினைத்தக்ஷணமே சுவிசேஷ போதகர்கள் ஏற்படுத்த வலியவந்து நிற்கும் பாடசாலைக்கு இடந்தரலாகாதெனும் கட்சியில்சேர்ந்தனர். நமது கொள்ளேகாலம் நேசர் மேற்கூறிய பக்ஷத்திலல்லாமல், எதிர்பக்ஷத்தில் சேர்ந்தனர். அவர் ஆத்திரமெல்லாங் கூடி அவர் அந்த க்ஷணமே ஏதேனும் ஒரு பாடசாலை வரவேணுமென்பதுதான். நாளொருவண்ணம் காலம் தள்ளுண்டு போவதில் தம் புதல்வர் கல்வியின்றிச் சீர்கெட்டுப் போகிறார்களென்பதை எண்ணி அவ்வாறு எதிர்வாதத்திற் சேர்ந்தாரென விளங்குகின்றது. அவர் அந்தக்கமிட்டிச்சபையில் எழுதிப்படித்த உபந்நியாசம் இது:—

குலமக்களே! இந்தக் கொள்ளேகாலத்தில் தகுதியளவிற்கு ஏற்குமாறு பாடசாலை ஒன்று இல்லாக்குறைவால் பெரியோர் சிறியோர் அத்தனை பெயர் உள்ளமும் குன்றித் தீராவிசாரங்கொண்டு ஏங்கியிருந்ததுண்டென்று நான் மிக்கு வற்புறுத்திச்சொல்ல நிமித்தமில்லை. இப்போது ஏற்பட்டிருக்கும் சாங்கமற்ற ஏற்பாடு குடிகளுக்கு ரமிக்காததினால், நூதன ஏற்பாடு ஆகவேணுமென்று ஒரு முறைக்கு ஒன்பது முறை லோக்கல்பண்டு கமிட்டியாருக்கும், வித்தியா வகுப்பு பரிசோதனைத் தலைவர்க்கும் செவிடன் காதில் சாளம் ஊதியதுபோல முறையிட்டு, வித்தியார்த்திகளுக்குக் கல்வி ஏறத்தகும் நடுத்தர வித்தியா வகுப்பு ஒன்றை ஏற்கெனவே ஏற்படுத்தித்தரவேண்டுமென்று, ஓ! ஓ!! எனக் கூவிக் குரவை இட்டதை இங்கு கூடிய அத்தனை பெயரும் திட்டமாய் அறிவார்கள். அந்த அதிபதிகள், ஏறவிட்டு ஏணி வாங்குவதுபோல, வற்புறுத்திக்கேட்ட குலமக்களுக்குத் தடையின்றி அபயங்கொடுத்தத் தம் இருப்பிடஞ்சேர்ந்த அந்தக்ஷணமே மறந்து, தம்பாட்டிலிருந்து மௌனம் சாதித்துவிட்டார்கள். மீண்டும் குலமக்கள் பெரும்பாலார் ஒருங்குகூடி, ஜில்லா அக்கிராசனரை நச்சிநச்சி லச்சைகொடுத்ததின்பேரில், அவர் கீழ்வகுப்புப் பாடசாலை ஒன்றைச் சமயங்கண்டு ஏற்படுத்துவதாகவும், அதற்குத் தகுதியளவிற்கு இடம் பொருள் ஏவல் எனும் சகாயங்கள் ஆகவேண்டியதென்றும் சொல்ல, அதைக் குடிகள் ஒப்பியும், அதைத்தொட்ட அனுகூலசெய்தி வரும் வருமென்று வழிக்குவழி தணியா ஆவலுடன் பார்த்த கண் பஞ்சடையக் கண்டு காத்திருந்தும், இதுகாலும் செய்தி ஒன்றையும் காணோம். அவர்கள் ஒதுங்கி ஒளித்துக்கொண்டதினால், அந்த முயற்சியின் வேர் ஆணி ஆழ்ந்து ஊரங்கொள்ளாதென்று தோன்றுகின்றது. கிட்டாதது ஒன்றை எட்டிப் பிடிக்க ஆசைப்பட்டு என்ன பயன்?

மேற்படி லோக்கல்பண்டு கமிட்டி சபையாரால் அவ்வேற்பாடு உண்டாமென்று நம்பி மனப்பால் குடித்து ஏமாறிப்போனோம். சமீபகாலத்தில் பெங்களூரிலிருந்து சுவிசேஷபோதகர் ஒருவர் வித்தியா வகுப்பை இங்கு ஏற்படுத்தவந்த சங்கதியையும் அவர் தோரணையில் அண்ணாஜிராயர் வந்திருக்கும் சங்கதியையுங் கேட்டு மனமகிழ்ந்தோம். சுவிசேஷபோதகர் வித்தியா வகுப்பில் கிறிஸ்த சமயார்த்தமான விஷயங்களைப்பற்றிய மூலாதாரங்களைப் பயிலப்பயில வித்தியார்த்திகளுக்கு மதபேதம் தரபேதம் உண்டாமென்று சிறுபான்மையோர் வீணான மனோராச்சியம் செய்வதற்கு ஏதும் ஆதாரம் இல்லை. அது காலங்கண்டதீய அபிப்பிராயம். வேரோடிப் பலத்திருக்கும் அந்தத் துர்மதிகளை வேரறத் தொலைவிக்க நம்மாலாகும் சமர்த்தெல்லாம் செய்துபார்த்துக் குடிகள் க்ஷேமத்தை நாடுவது நம் எல்லோர் கடன்:—நம் இராஜ பெருமாட்டியார் வாழும் லண்டன் நகரத்தில் ஏற்பட்டிருக்கும் கமிட்டி சபையில், தர்மத்திற்காகக் குலமக்கள் தலைமக்கள் பெரும்பாலாரும், அதிகாருண்ய மஹாராஜாத்தியவர்களும், அவர் ராஜகுடும்பத்தாரும் வாலாயமாகக்கொடுக்கும் கட்டணத்தைக்கொண்டு சுவிசேஷபோதகர்கள் தங்கங்கு அனுகூலமான இடங்களில் கீழ்தர உயர்தர வித்தியா வகுப்புகளை வைத்துத் தேசத்தை நாகரீகஞ்செய்து வருவதொழிய, தம் வித்தியா வகுப்புகளில் கலைபயிலும் இளைஞரை மதபேதம் செய்ய அல்லவே. இதற்குத் திருஷ்டாந்தமாக நாமும் நமது இஷ்டர்களிற் பெரும்பாலாரும் மனக்கரவில்லாத சுவிசேஷ போதகர்கள் ஏற்படுத்தி நீடூழி வாழ்ந்துவரும் வித்தியாவகுப்புகளில் கலைபயின்று தேர்ந்து மதமயக்கமின்றிச் சுகுணசுசிர்தாலங்காரராயிருப்பதை இதோ நாம் நமது கண்ணெதிரே சாக்ஷியாய்க் காண்கிறோம். இப்பொழுது ஊமையன் சொற்பனங்கண்டதுபோல, லோக்கல்பண்டு பாடசாலை ஏற்படுமென்று பிறத்துலாவும் வதங்கிப்படிக்கு அந்தப் பாடசாலை வருந்தனையும் மௌனம் சாதித்துக் காப்பதோ? அல்லது, வலியவந்து நமது சுகிர்தத்தைநாடி வித்தியாவகுப்பை ஏற்படுத்தப் பணிவந்து கெஞ்சிக்குலாவும் சுவிசேஷபோதகர்கள் வித்தியா வகுப்புக்குச் சன்மானித்து ஒப்புக்கொள்வதோ? என்பதைத் தீர்க்காலோசனை செய்துபார்ப்பது நமது கடன். லோக்கல்பண்டு பாடசாலை ஏற்படுவதில், காலக்கிரமத்தில் வரவுக்குச் செலவு மிஞ்சுமானால், பாடசாலை நிலைகொள்ளாமல் குன்றும். பாடசாலை நடந்தேறத்தகும் ஸ்தளம் ஒன்றைக் குடிகளில் எவராயி

ஹும், அல்லது சிலர் ஒன்றாகூடியாயினும் இலவசமாகத் தரத்தான் வேண்டும். இத்தனையும் வாய்த்திடினும் போந்தமட்டும் கலைபயின்று தேறிய உபாத்தியாயர்களுக்குத் தகுமளவிற்கு சம்பளங்கொடுக்கச் சபையாருக்குப் பலமில்லாததினால், சாமானிய உபாத்தியாயர்களை ஏற்படுத்துவார்கள். அதனால் வித்தியாசாலை என்றும்போலச் சீர்கெட்டே நிற்கும். சம்பளக்குறைவினால், உபாத்தியாயர்கள் அடிக்கொருதரம் மாறுபடுவார்கள். அந்தக் கஷ்டத்தால் வித்தியார்த்திகளுக்குக் கல்வி ஏறாது. இப்படி இந்த ஏற்பாட்டில் எட்டுத்திக்கிலும் அன்பட்- சுவிசேஷபோதகர்கள் திரவியத்திற்காக எங்கும் எதிர்பார்க்க நிமித்தமில்லை. நாம் மேலே சொன்ன லண்டன் கமிட்டிச் சபையினின்று அவர்களுக்குத் திரவியம் ஏராளமாய் வருகின்றது. அதைக்கொண்டு அவர்கள் தீரத்தெளியக் கற்ற உபாத்தியாயர்களை ஏற்படுத்தி அவர்களுக்குத் தகுமளவிற்குச் சம்பளம் கொடுக்கத் துணிந்திடுவார்கள். பாடசாலைக் கட்டடத்தைக் குறித்து எவர் கையையும் எதிர்பாராமல் தாமே தம் திரவியத்தைக் கொண்டு கட்டிவிடுவார்கள். யுத்தி புத்தியும் கல்வித்திறமும் உடையோர் நாகரிக விஷயமாய்ச் செய்யும் பிரபல முயற்சிகளுக்குத் துணைநின்று உதவத்தக்க போக்கியர்கள் அந்தப் பிரபுக்களே. முழுக்கூறும் சிந்திக்குமளவில் அவர்கள் விரும்பத்தகும் குணங்குறிகள் அபரிமிதமாய் உள்ளவர்களென்று சில சுதேசர் மனோபாவனை செய்வதொன்றும் வியர்த்தமல்ல. தலைகொள்ளும் எவ்விதவிபரீதத்திற்கும் அவர்கள் அஞ்சாமல் கடைப்பிடியாய்நின்று பாடசாலையை கைமாறின்றி ஒழுங்கு தவறாது ஆம் அனைத்தும் இன்னவை இனியவை என்று கண்டு ஆவலுடன் செய்து முடித்திடுவார்கள். அதனால் நம் இளைஞர்கள் கலை பயில்வதற்கு ஏதும் இடையூறின்றி எதுவும் அனுகூலமாய்முடியும். இளைஞர்கள் கலைபயில ஆரம்பிக்கும்போதே நல் ஒழுக்கங்களையும் நீதிகளையும் பயிலப்படுவார்கள். கிறிஸ்தவ பாடசாலை இங்கு ஏற்படுவேதினால், நம் நாட்டில் நாகரிகமும் க்ஷேமமும் செழிப்பும் தலைகொள்ளும்; நாம் இதுகாறும்பட்ட நிர்ப்பந்தம் நிலையறும். அவர்கள் ஏனைய கமிட்டி சபையாரைப்போல அல்ல; என்ன வந்தாலும் தொடங்கின கருமம் முடிக்காமல் விடுகிறதில்லை என்று சங்கற்பித்து தீவிரசத்தியாய் ஒரு அயனவட்டத்தினுள் நம் நாட்டில் வித்தியாவகுப்புகள் பலவற்றை ஏககாலத்தில் நாட்டுவார்கள் என்று இதய பூர்வமாய்ச் சொல்லுகிறோம். இந்தப் போதகர்கள் நடத்தும் வண்ணம் ஏனைய கமிட்டிச் சபையாரும் செய்து முடித்திடுவார்களென்று நாம் சொப்பனத்திலும் எண்ண இடமில்லை. ஏனைய சபையாருக்கு அவ்வாறு செய்திடத் திரவியசகாயம் கைகூடுவது சாத்தியமல்ல. கரும்பை நினைத்து விரலைக்கடித்தால் பயனென்ன? தித்திக்குமா? முடியாத காரியம் என்றும் முடியாது. இந்த நமது உபந்நியாசம் அத்தனையும் எவரையும் அகப்படுத்த விரித்த வலை என்று குலமக்கள் தலைமக்கள் எவரும் எண்ணமிடாதிருக்கப் பிரார்த்திக்கிறோம். உள்ளதை உருவச் சொன்னதன்றி பற்றப்படி அல்ல சொன்னதைச் சுருக்கிப் பின்னும் இரண்டொரு வார்த்தையில் சொல்லுகிறோம். சுவிசேஷபோதகர்கள் ஏற்படுத்தும் பாடசாலைகள் நாளொருவண்ணம் சீர்பட்டு நீடூழிவாழும். அதனால் நம் இளைஞர்கள் கலைபயின்று தேறுவதற்கு இடமுண்டு. இது நிஜம்: ஆகவே, இங்கு கூடிய பிரபுக்கள் அத்தனைபெயரும் கிறிஸ்தவபாடசாலை ஒன்று இங்கு ஏற்படுத்துவதற்கு அனுகூலிகளாயிருந்து சம்மதம் தருவார்களென்று இதய பூர்வமாய் நம்புகிறோம்.

இந்நாட்டில் தலைகொண்டுவந்த விபரீதத்தை எண்ணிப் பவனி வந்த அண்ணாஜிராயர் அஜாக்கிரதை ஒழிந்து, தமது பதவியையும் தமது தோள்மேல் ஏறிய பாரம் பழியையும் நீளநினைந்து வித்தியாசாலைக்காகச் செய்யத்தகும் கடன் அத்தனையையும் முடிக்கத் துணிவாரானால் நமது பாக்கியந்தான்.

இஷ்டர்களே வந்தனம்.

கோள்ளேகாலம் நேசன்.

சர்வஜித்து வருஷத்திய

ரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்.

இது பார்த்திப௵ முதல் பிரசுரமாகி, வருகிற சர்வஜித்து வருஷமும் வெளிப்படுத்தப்படும். இவ்விந்து தேசத்திற்கு அநேக நன்மை செய்து ஜனங்களால் புகழப்பட்ட மாஜி கவர்னர் ஜனரலான லார்ட் ரிப்பன்பிரபுவின் நன்றி அறிதலுக்கு அறிகுறியாக, சீமையிலிருந்து தருவிக்கப்பட்ட அவர் பிரதிபிம்ப படத்துடன் அவர் போல் அச்சிடப்பட்டு வருகின்றது. இதில் வைதீக லௌகீகங்களுரிய அநேக விஷயங்களிருப்பதால் யாவர்க்குமே ஆவசியகமானது. தேசாபிமானிகளான நமது இந்து நண்பர்கள், “நல்லாரைக்காண்பதுவும் நன்றே,, என்றபடி அப்புருஷோத்தமரைத் தினமும் பல்கால் காணுவதற்கு ஏதுவாயும், நன்றியறிதலுக்குக் காரணமாயும் இராநின்ற இப்பஞ்சாங்கத்தை, வருஷந்தோறும் பரிபாலித்து வருவதோடு, தங்கள் தங்கள் நண்பர்களையும் பரிபாலிக்கச்செய்யப் பிரார்த்திக்கின்றனம். அழகான சீமைப் பென்சலும் கொடுக்கப்படும். 1887-௵ மார்ச்சு௴ 1௳க்குள் வெளியாகும். பிரதி 1-இ விலை அணா - 6. தபால் சார்சு அணா - 1. 10 இ - 1ம், 25 இ 3ம், 50 இ 7ம்; 100 இ 14ம் கம்மீஷனாக மேலே கொடுக்கப்படும். 1887-௵ ஜனவரி௴ - 31௳க்குள் நூறு பிரதிக்காகப் பணம் கட்டுகிறவர்க்கு 20 மேலே கொடுக்கப்படும். இந்த ஏற்பாடு வாங்கி விற்பவர்க்காக ஏற்படுத்தியது.

அச்சிட்டிருக்கும் புத்தகங்கள்.

மாதர் நீதி- 1 இ அணா- 6. தபால் சார்ஜ் அணா 1. மனுமுறை கண்டவாசகம் 1- இ அணா- 4. தபால் சார்ஜ் அணா அரை இது சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளால் எளியவசன நடையில் இயற்றியது. (இது சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரிடமும் கிடைக்கும்.)

வேண்டியவர்கள் சென்னை முத்தியாலுபேட்டைத் தம்பு செட்டிவீதி 316- நெ. மதராஸ் ரிப்பன் பிரஸ் மானேஜர் கு. சடையாண்டிசெட்டியார் பேருக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். பதில் வேண்டுவோர் அரை அணாலேபில் அனுப்பவேண்டும்.

கு. சடையாண்டிசெட்டி,

மானேஜர்.

சிதம்பரம்

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்

விற்கப்படும் புத்தகங்கள்.

சர்மிஷ்டாவிஜயம்	,,	௬	,,
பகவத்கீதார்த்த தீபிகை	௪	,,	,,
ஆச்சரிய தர்ப்பணம்	௧	௪	,,
அஷ்டாங்கயோகம்	,,	௫	,,
ஆரியாதண்டகம் / லக்ஷ்மிஸ்தோத்திரம்	,,	௧	,,
மகேஸ்வரதண்டகம்	,,	௧	,,
சங்கர சரித்திரம்	,,	,,	௬
ஆத்மாவும், சரீரமும்-	,,	௧	,,
சகாதேவசாஸ்திரம்	,,	௧	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	௪	,,
மாதர்நீதி	,,	௬	,,